**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT DHARMAPURI**
**I.D.No. 54 of 2018**
**Deposition of RW2**

Name : திரு சுந்தரம் Father's Name : பெரியவேடி

Village : அங்கினாம்பட்டி Taluk : கிருஷ்ணகிரி

Age : 46 Calling :

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Tr. Tamilkumaran, Record Keeper ( ID Clerk Incharge ) of this court on 21.11.2025 in accordance with Provisions X of Evidence Act 1872.

முதல் விசாரணை

நான் அசல் மனுவில் 3ம் தரப்பினர். நான் எதிர்மனுதாரர் போக்குவரத்துக்கழகத்தில் தற்போது கிருஷ்ணகிரி கிளையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 03.11.2016 ல் சேலம் பெங்களூர் வழித்தடத்தில் பேருந்து எண்.TN.29 M 2668 பேருந்தில் நான் ஓட்டுநராக பணிபுரிந்து மேற்படி தேதியில் சேலம் பேருந்து நிலையத்திலிருந்து மாலை 5.32 க்கு டிரிப் எடுத்து பெங்களூர் சென்றேன். என்னுடன் நடத்துநராக வெங்கடேசன் என்பவர் பணிபுரிந்தார். அன்றைய தினம் மாலை 6.50 க்கு பாளையம்புதூர் என்ற இடத்தில் எங்கள் கழகத்தை சார்ந்த பரிசோதகர்கள் இருவர் பேருந்தை நிறுத்தி ஏறி ஆய்வு செய்தார்கள். அப்போது Ticket மறுவிற்பனை செய்ததாக Checking Inspector சொன்னார். என்னை வண்டியை தர்மபுரி பேருந்து நிலையத்தில் நிறுத்தி பயணிகளை

விசாரிக்குமாறு சொன்னார்கள். சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் என்னிடம் கொடுத்த ரூ.130/- மதிப்புள்ள ரூ.100/- மற்றும் ரூ.30/-க்கான டிக்கட்டை நடத்துநர் கொடுத்தார் என்றும், அதில் 100 ரூபாய் டிக்கட் மறுவிற்பனை டிக்கட் என்று சொன்னார். 30 ரூபாய் டிக்கட் ரன்னிங் டிக்கட். இதை நான் நேரில் பார்த்தேன். இது சம்பந்தமாக டிக்கட் பரிசோதகரிடம் வாக்குமூலம் எழுதிக்கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் Ex.R4 வாக்குமூலம்தான் நான் கைப்பட எழுதிக்கொடுத்தது. அதில் நானும், நடத்துநரும், இரண்டு பரிசோதகர்களும் கையெழுத்து போட்டுள்ளோம். இது தவிர பயணி ஒருவர் எழுதிக்கொடுத்துள்ளார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் Ex.R3 வாக்குமூலம்தான் பயணி அந்த சமயத்தில் எழுதிக்கொடுத்தது. அந்த வாக்குமூலத்தில் நானும், நடத்துநரும், இரண்டு பரிசோதகர்களும் கையெழுத்துபோட்டுள்ளோம். பரிசோதகர்கள் நடத்திய சோதனையிலிருந்து ரூ.100/-க்கான பயணச்சீட்டு நடத்துநரால் மறுவிற்பனை செய்ததாக தெரிந்துகொண்டேன்.

**குறுக்குவிசாரணை (மனுதாரர் தரப்பில்)**

நான் 2007ம் ஆண்டு முதல் எதிர்மனுதாரர் போக்குவரத்துக்கழகத்தில் வேலை செய்கிறேன். என்னுடைய பணிக்காலத்தில் எவ்வெப்போதெல்லாம் எந்தெந்த இடத்தில் பரிசோதகர்கள் பேருந்தை பரிசோதனை செய்தார்கள் என சொல்லமுடியுமா என்றால் நிறையமுறை பரிசோதனை செய்துள்ளார்கள் குறிப்பிட்டு சொல்லமுடியாது. நான் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் கடிதத்தில் பேருந்தின் பதிவு எண். குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாளையம்புதூர் நிறுத்தத்தில் எத்தனை மணிக்கு பரிசோதகர்கள் பேருந்தில் ஏறினார்கள் என்றும்,

அவர்களது பெயரும் என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 03.11.2016 தேதிக்கு முன்பு நானும், நடத்துநரும் எப்போது பணியை ஆரம்பித்தோம் என்றால் அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு ஆரம்பித்தோம். பணி ஆரம்பிப்பதற்கு முன்பு நடத்துநர் பணிமனையிலிருந்து எத்தனை ரூபாய் மதிப்புள்ள எத்தனை பயணச்சீட்டுகள் வாங்கிவந்தார் என்றால் தெரியாது. தர்மபுரி பேருந்து நிலையத்தில் பரிசோதகர்கள் என்னை விசாரிக்க சொன்னபோது நடத்துநர் வைத்திருந்த பயணச்சீட்டுக்களை நான் வாங்கி பரிசோதனை செய்தேனா என்றால் இல்லை.

பயணியிடம் தர்மபுரி பேருந்து நிலையத்தில் நான் விசாரித்தபோது பயணி கொடுத்த 100 ரூபாய்க்கான பயணச்சீட்டு எப்போது நிர்வாகம் நடத்துநருக்கு கொடுத்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. பயணி தன்னிடம் ரூ.100 க்கான டிக்கட் கொடுத்தார்கள் என்றுதான் காட்டினார் என்றும், மறுவிற்பனை செய்த சீட்டு என்று சொல்லவில்லை என்றால் சரிதான். பயணி காட்டிய அந்த பயணச்சீட்டு மறுவிற்பனை செய்யப்பட்ட சீட்டு என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கொடுத்த வாக்குமூலத்தில் சம்பந்தப்பட்ட பயணி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். என்னுடைய கடிதம் பயணியின் கடிதம், நடத்துநர் கடிதம் ஆகியவை கிருஷ்ணகிரி பேருந்துநிலையத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரிதான். கடிதம் எழுத பேப்பர் பரிசோதனை ஆய்வாளர் வைத்திருந்து கொடுத்தார். மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையில் சம்பவத்தன்று நான் கடிதம்

எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பந்தப்பட்ட பயணியின் முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பரிசோதனைக்கு பிறகு அந்த பயணி வேறு வண்டியில் மாற்றி கிருஷ்ணகிரி பேருந்துநிலையத்திலிருந்து ஏற்றிவிடப்பட்டார். பாளையம்புதூரில் பரிசோதகர்கள் ஏறியபோது பேருந்தில் எத்தனை பயணிகள் இருந்தார்கள் என்றால் 80 பேர் இருந்தார்கள். Over Load ஆக இருந்தது.

பாளையம்புதூரிலிருந்து பேருந்து நிறுத்தப்பட்டு பரிசோதனை செய்யப்படவில்லை என்றும், தொடர்ந்து பேருந்து இயங்கியது என்றும் சொன்னால் சரிதான். தணிக்கையாளர்கள் சொன்னதன்பேரில்தான் பயணச்சீட்டு மறுவிநியோகம் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். எனக்கு நேரடியாக பயணச்சீட்டு மறுவிநியோகம் என்பது தெரியாது என்றால் சரிதான். தணிக்கையாளர்களின் கட்டாயப்படுத்துதல், மிரட்டல் காரணமாக என்னுடைய கடிதம் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும், நிர்வாகத்தின் கட்டாயத்தின்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem